
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | மார்ச் 1992 | இதழ் 3



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
வெள்ளி : மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை)
சனி : மக்கள் சந்திப்பு

## தலைப்புச் செய்திகள்


1. நீங்களே தீர்ப்பளியுங்கள் 1-6
2. பத்துக் கட்டளைகள் - நேற்றும் இன்றும் 7-11
3. வதந்திகளைப் பரப்பாதீர்! 12-13
4. புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டு அமைக்கும் பணிக்கு நேசக்கரம் நீட்டுவீர் 14-18
5. நல்லவர்களை நாடி கேடுகள் வருவதேன்? 19 20
6. அற்புத அடையாளங்கள் நடைபெறுவது உண்மையா? 21-22
7. சத்தியம் விலைமதிப்பற்றது! 23-24
8. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? 25
9. திருமறை ஆசான் உரிமை பற்றிய அறிக்கை 26
10. பாவங்களை அந்தரங்கமாக அறிக்கையிடுதல் 27-28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

* * *

Published by Church of Christ
Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity :

Vol 5. March—1992 Issue 3


**ஆசிரியவுரை**

## நீங்களே தீர்ப்பளியுங்கள்.

தற்காலத்தில் செய்தித்தாள்களைத் திறந்தால் முதலில் நம்முடைய கண்களில் படுவது ''கட்சியில்பிளவு'' கட்சியை உடைக்கக் கோடிக்கணக்கான பணம் கைமாறியது'' என்பன போன்ற செய்திகள்தான். இது ஏதோ புதுமை என்று திகைக்காதீர்கள். சாத்தான் நீண்ட நாட்களாகவே இப்போர் முறையை பயன்படுத்தி, இயேசு கிறிஸ்து தம் சொந்த இரத்தத்தைச் சிந்திக் கட்டிய (அப். 20:28) தம்சரீரமாகிய சபையை சின்னாபின்னபடுத்தி மகிழ்ந்துகொண்டிருக்கிறான் அதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், அவர் பெயரால் இயங்குகின்ற ஸ்தாபனங்களையும், நபர்களையும் கொண்டே இந்த கைங்கரியத்தை இலாவகமாகச் செய்து விடுகிறான்.

அநீதத்தின் கூலிக்கு ஆசைப்பட்டு மோசம் போன இந்த நபர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களைத் திரித்தும் சிதைத்தும், நீட்டியும், குறுக்கியும் மக்களுக்கு விநியோகித்து குழப்ப முண்டாக்குகிறார்கள். அவைகளில் சிலவற்றை உங்கள் முன் வைக்கிறோம்.

**நீங்களே தீர்ப்பு கூறுங்கள்,**

அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று கூறும் அதே வேதாகமம், அது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் முடிந்து போயிற்று என்றும் கூறுகிறது, அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று ஒருவர் விசுவாசிப்பாரானால், அது முடிந்து போயிற்று என்று கூறுவதையும் விசுவாசிக்க வேண்டும் அல்லவா?

தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்றவும், தேவைப்படும் போதும் அற்புதங்கள் செய்கிறார். நோக்கமும் தேவையும் முடிந்த பின்னர் இயற்கைச் சட்டத்துக்கு ஒப்புக் கொடுத்து விடுகிறார்.

**1. தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை மட்டுமே அற்புதமாக படைத்தார்.** ஆனால் அதற்கு அடுத்து வந்த மனிதர் அனைவருமே இயற்கை விதிகளுக்குட்பட்டே பிறந்து வளர்ந்தனர். உங்களையே எடுத்துக் கொள்ளுங்களேன்! உங்கள் சரீரம் அற்புதமாகப் படைக்கபட்டதா? இல்லைதானே! அதே போல் தான் தேவன் ஒரு காரியத்தின் ஆரம்பத்தில் செய்த அற்புதத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிராமல் இயற்கை விதிகளுக்கு ஒப்புக் கொடுத்து விடுகிறார்.

**2. பரிசுத்த வேதகாமம் அற்புதமாய் எழுதப்பட்டது.** பரிசுத்த ஆவியானவர் துணை கொண்டு பரிசுத்த மனிதர்கள் வேதாகமத்தை அற்புதமாய் எழுதினார்கள் 2 பேதுரு 1:21. தாங்கள் ஒரு போதும் கற்றறியாத மொழிகளில் பிரசங்கித்தார்கள்; தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். (அப் 2:4) ஆனால் பரிசுத்த வேதாகமம் முழுமையாக எழுதப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் நிறுத்தப்பட்டு விட்டன. ஏனெனில் தேவன் மனிதர்களுக்கு அளிக்க வேண்டிய அருட்செய்திகள் அனைத்தையும் பரிசுத்த வேதாகமத்தில் பொறிக்கப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் தேவைப்படவில்லை. வெளி 22. 18-19; யாக் 1:25. இப்பொழுது நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் முழுமையாய் எழுதி முடிக்கப்பட்ட வேதாகமத்திலிருந்து தேவனுடைய அருட்செய்திகளை மக்களுக்குப் போதித்து வருகின்றனர்.

ஆனால் ஒரு சிலர் தேவன் தங்களுக்கு புதிய புதிய வெளிப்பாடுகளை கொடுக்கிறார் என்று தங்கள் அபிப்பிராயங்களுக்கு தேவவாக்கு என்னும் சாயத்தை பூசி பாமர மக்களை ஏமாற்றுகின்றனர். ஒரு நாள் ஒரு நரிக்குறவர் இனத்தை சேர்ந்த ஒரு நண்பர் நரிக்கொம்பு வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். நரிக்கு கொம்பு இருக்கிறதா என்பது முதல் கேள்வி. இரண்டாவது இத்தனை கொம்புகள் எப்படிக் கிடைத்தன என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அனுபவப்பட்ட (?) ஒருவர் நரிப்பல்லுக்கு பசை போட்டு சில முடிகளைச் சுற்றிலும் ஒட்டி ஏமாற்றுகிறான் என்று உண்மையை உடைத்தார். அந்த ஆள் அவரை முறைத்துப்பார்த்து விட்டு நைசாக நழுவி விட்டான். இந்தப் புதிய வெளிப்பாட்டுக்காரர்களைப் பார்த்தால் அவனுடைய ஞாபகம் தான் வருகிறது. இவைகளையெல்லாம் தெரிந்துதான் தேவன் கூட்டாதே குறைக்காதே என்றும் (வெளி 22:18,19) வானத்திலிருந்து வந்த தூதனாயினும் சரி. அவன் சபிக்கப்பட்டவன் என்று ஒன்றுக்கு இரண்டுமுறை சொல்லுகிறாரே? (கலா 1:6-9)

**3. வனாந்திர யாத்திரையின் போது நாற்பது ஆண்டு காலமாக இஸ்ரவேல் மக்கள் மன்னாவை ஆகார மாகப் புசித்து வந்தார்கள்.** யாத் 16;35, ஆனால் அவர்கள் கானான் தேசத்துக்கு வந்து விவசாயம் செய்து முதல் பலனைப் புசிக்கத் துவங்கிய மறுநாளிலே மன்னா பெய்வது நின்றுவிட்டது (யோசுவா 5:12) அதன் பிறகு அவர்கள் இயற்கை நியதிக்குட்பட்டு உழைத்து விளைவித்து உண்டனர்.

**4. பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் வந்த பொழுது புறா வடிவில் வந்தார்.** யோவான் 1,32-34 அவர் தான் தேவகுமாரன் என்றும் அவரே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறவர் என்றும் யோவான் ஸ்நானகனுக்குத் தெரிவிக்கவும் அது அவ்வாறு நடந்தது என்று வேதாகமம் கூறுகிறது. 1 : 33, 34 அந்த நோக்கம் நிறைவேறின பின்பு வேறு எவருக்கும், ஒரு போதும் அப்படிப்பட்ட முறையில் பரிசுத்த ஆவி அருளப்படவில்லை.

**பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கினதைப் போல என்மீதும் இறங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது லிவேகமாகாது.**

அப்போஸ்தலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்கள் எனக்கும் மற்றும் இந்நாட்களில் வாழும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் என்று வாதிடுவது அறியாமை. அவர்கள் வேதாகமத்தில் உள்ள அனைத்து உண்மைகளை எழுதுவதற்கான கட்டளை பெற்றிருந்தார்கள் (யோவான் 16:13), அவர்களுக்குக் கட்டுவதற்கான அதிகாரமும் கட்டவிழ்ப்பதற்கான அதிகாரமும் கூட உண்டு. (மத் 18;18). தேவன் சபையில் முதலாவதாக அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார். (1கொரி 12:28) அப்போஸ்தலர்கள் சபையின் அஸ்திபாரங்கள் (எபே 2:20) அப்படி நாம் எல்லோருமே அஸ்திபாரங்களா? இல்லையே. அப்படியிருக்க அப்போஸ்தலருக்குச் சிறப்பாகக் கொடுக்கப்பட்ட சில அதிகாரங்கள் உரிமைகள் எனக்கும் ஏன் இருக்கக் கூடாது என்று வாதிடுவது பொருந்துமா? அக்கினி மயமான நாவுகள் போன்ற நாவுகள் அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவர் மீதும் அமர்ந்தனவே (அப் 2;3) அப்படி உனக்கும் எனக்கும் ஏற்பட்டதா? அதை தேவன் அவர்களுக்கு ஒரு நோக்கத்துக்காக கொடுத்தார் (மாற்கு 16:20) நாம் அதை இச்சித்து, தேவனுக்கு எரிச்சல் உண்டாக்க கூடாது,

அப்படியானால் இன்றும் அற்புத அடையாளங்கள் நடக்கிறது என்று கூறுகிறார்களே அது எப்படி?

**சாத்தான் பொய்யான அற்புதங்களைச் செய்து ஏமாற்றுவான்.**

2 தெச 2:9-12ல் சாத்தான் வல்லமையோடும், பொய்யான அற்புதங்களோடும் வருவான் என்று எச்சரிக்கிறது. சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப் படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்குள் அனுப்புவார் என்று கூறுகிறது. மேலும், வெளி 13:13-ல் 'அன்றியும் அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின் மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாக பெரிய அற்புதங்களை நடப்பிப்பார்கள்' என்று கூறுகிறது மத் 7:22-ல் கூட இக்கள்ள தீர்க்கதரிசிகள் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புத அடையாளங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் என்றும் அவர்களை ஆண்டவர் 'அக்கிரமச் செய்கைக்காரரே' என்று பட்டம் சூட்டி விரட்டித் துரத்திவிடுவார் என்றும் வாசிக்கிறோம். 2 கொரி 11:13—15 வசனப்பகுதியில் அப்படிப்பட்டவர்களை கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள்; கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே, ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக இருக்கும் என்கிறது.

அப்படியானால் அசலையும் போலியையும் எவ்வாறு அடையாளம் கண்டுகொள்வது? சோதித்து பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று வேதாகமம் ஆலோசனை கூறுகிறது 1 யோவான் 4:1-ல் 'பிரியமானவர்களே உலகத்தில் அநேக கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதனால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்' என்று கூறுகிற அறிவுரையின்படி அவர்களைச் சோதித்துப் பார்ப்பதே சிறந்த வழி. ஆறாம்வசனத்தில் அப்போஸ்தலர்கள் தேவனுடையவர்கள் என்றும், தாங்கள் எழுதி வைத்துள்ளவைகள் தேவனுடைய வசனங்கள் என்றும், தேவனை அறிந்தவன் தங்களுக்குச் செவி கொடுக்கிறான் என்றும் இதனாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும், அறிந்திருக்கிறோம் என்றும் கூறுகிறது.

**தற்காலத்தில் செய்யப்படும் அற்புத அடையாளங்கள் வேதாகம அற்புத அடையாளங்களைப் போல தெளிவும் திட்டமாகவும் இல்லை.**

அப் 2:6, 8-ல் பேசப்படுகிற அந்நிய மொழி உண்மையாகவே ஒரு குறிப்பிட்ட மொழி என்று தெரிகிறது. அதை பவுலும் உறுதி செய்கிறார் (கொரி 14:10) ஆனால் தற்காலத்தில் அந்நிய பாஷை என்ற பெயரில் தத்துபித்து என்று உளறிக் கொண்டு, ஆவேசம் வந்தவர்கள் போல் உடம்பை அலட்டிக் கொண்டு கூச்சல் போடுகின்றனர். 1 கொரி 14:19-ல் **அந்நிய பாஷைகளை பேசுவதைப் பார்க்கிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோட ஐந்து வார்த்தைகளைப் பேசுவது சிறந்தது** என்று பவுல் கூறுகிறார். ஆனால் தற்காலத்தில் அந்நிய-பாஷை பேசுகிறோம் என்று சொல்லுபவர்கள் உளறலில் பெருமை பாராட்டுகிறார்கள். 1 யோவான் 4:6-ன்படி அவர்கள் வஞ்சக ஆவியினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. தயவு செய்து அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்காகவும் கிறிஸ்து மரித்தாரே.

**அதேபோன்று தற்கால தெய்வீக சுகம் என்பதும் வெறும் விளம்பரமே.**

அப் 3:2-ல் சொல்லப்பட்டிருக்கிற முடவன் யாராலும் சுகப்படுத்த முடியாத அளவுக்கு பிறவிலேயே முடவன். அவனைப் பேதுருவும், யோவானும், அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சுகமாக்கினார்கள். அவனும் நடந்து குதித்துக் குதித்து நடந்து பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கிறான். தற்கால தெய்வீக சுகம் கொடுக்கிறோம் என்று கூறும் நபர்கள் வியாதி இருக்கிறதா? இல்லையா என்று மக்கள் புரிந்து கொள்ள முடியாத சந்தேகக் கேசுகளைத் தெரிந்து கொண்டு பழைய ஏற்பாட்டுப் பாகால் தீர்க்கதரிசிகளைப் போல் ஆட்டம் போட்டு, கூச்சல் பண்ணிக் கும்மாளம் அடித்து, ரகளை பண்ணி புறவினத்தார் கிறிஸ்துமேலே கொண்டிருக்கிற கொஞ்சம் நஞ்சம் மரியாதையையும் கெடுத்து வருகிறார்கள். அப்போஸ்தர்கள் வியாதிகளைச் சுகப்படுத்தின பொழுது எதிரிகள் கூட மறுத்துப் பேசமுடியவில்லை (அப் 1:16) யென்பதை வாசித்துப் பார்த்து இவர்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

மேலும், அப்போஸ்தலர்கள் தங்களிடத்தில் கொண்டு வரப்பட்ட அனைத்து நோயாளிகளையும் சுகப்படுத்தினார்கள் அப் 5:6, ஆனால் தற்காலத்தில் இந்தப் பேர்வழிகள் கும்பகோணத்தில் கூட்டம் போட்டுக் கோயமுத்தூரில் சுகமடைந்தவர்களைப் பற்றி சொல்லுவார்கள்; சேலத்தில் கூட்டம் போட்டு செங்கல்பட்டில் சுகமடைந்தவர்களின் பட்டியலை வாசிப்பார்கள். 'பல கூட்டங்-

களுக்கு வந்து கொண்டேயிருக்கிறேன்; எனக்கு இன்னும் சுகம் கிடைக்க வில்லையே' என்று ஏக்கத்தோடு கேட்கும் ஏழையைப் பார்த்து. ''உனக்கு விசுவாசம் இல்லை, அதனால் சுகம் கிடைக்க வில்லை'' என்று பழிபோட்டு விடுவார்கள் அல்லது மெல்லத்தான் சுகம் ஆகும் என்று மழுப்புவார்கள் எங்கள். பாஸ்டருக்கு ஆண்டவர் டெலிபோன் பேசுவார். அது வரையிலும்நீ உபவாசம் இருந்து ஜெபம் பண்ணு; சுகம் கிடைத்தால் எங்கள் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணிக்கொள் என்று பேரம் பேசுவார்கள். பிரேதக்குழியில். கிடந்த லாசருக்கு எந்த விசுவாசம் இருந்தது? என்று கேட்கத் தெரியாத அப்பாவி மக்களிடம் தானே, இவர்கள் வியாபாரம் எல்லாம் (யோவான் 11:39-44.) நாங்கள் அப்போஸ்தலர்களை விட ஒன்றும் குறைந்தவர்கள் இல்லை, என்று வீராப்புப் பேசும் இந்த நண்பர்கள் அப்போஸ்தலர்களைப் போல மரித்தவர்களை எழுப்புவார்களா? (அப் 20:10-12) கொடியவிஷ ஜந்து தீண்டினாலும் மரிக்காமல் இருப்பார்களா? (அப்28:3-6) நீர் மேல் நடப்பார்களா? மத்14:29) மாட்டார்கள் ஏனெனில் அவர்களால் முடியாது. ஏன் முடியவில்லை? ஏனெனில் அவைகள் என்ன நோக்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறி விட்டது (மாற்கு 16:20) இனிமேல் 20 நூற்றாண்டுக்கு பிறகு இவர்கள் எதைஉறுதி செய்ய இப்படி அலட்டிக் கொள்கிறார்களோ தெரியவில்லை. அப்படிப்பட்ட மக்களைக் கண்டால் வெறுத்து ஒதுக்காதீர்கள். அது அவர்களுடைய குற்றமன்று; பொல்லாத பிசாசு-தேவனுக்கும் மனுஷனுக்கும் சத்துரு அவர்களுடைய கருத்தைக் குருடாக்கி விட்டான், (2கொரி 4:4) அவர்களுக்கு பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்கும்படி பிதாவினிடம் வேண்டிக்கொள்ளுங்கள் (எபே1:19)

**E-Z. செல்வநாயகம்.**

**பக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அதன்பலனை மறுதலிக்கிறார்கள்**

மேலும், மனுபுத்திரனே, உன் ஜனத்தின் புத்திரர் சுவர் ஓரங்களிலும், வீட்டு வாசல்களிலும் உன்னைக் குறித்துப் பேசி, கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட வார்த்தை என்னவென்று கேட்போம் வாருங்கள் என்று ஒருவரோடொருவரும் சகோதரனோடே சகோதரனும் சொல்லி

ஜனங்கள் கூடி வருகிற வழக்கத்தின்படி உன்னிடத்தில் வந்து, உனக்கு முன்பாக என் ஜனங்கள் போல் உட்கார்ந்து **உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள் ஆனாலும் அவர்கள் அவைகளின் படி செய்கிறதில்லை, அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள் அவர்கள் இருதயமோ பொருளாசையைப்** பின்பற்றிப் போகிறது. எசே 33 30 படி செய்யாமற் போகிறார்கள்.

இதோ, அது வருகிறது; அது வருகையில் தங்கள் நடுவிலே ஒரு தீர்க்கதரிசி இருந்தான் என்று அறிந்து கொள்வார்கள் என்றார். ஏசே 33:30-33.

# பத்துக்கட்டளைகள் - நேற்றும் இன்றும்

பன்னெடு காலமாகவே பத்துக்கட்டளைகள் கிறிஸ்தவர்களாயிருக்கிற நம்மை கட்டுப்படுத்துகிறதா இல்லையா என்று சர்ச்சை கிறிஸ்தவ மக்களிடையே குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது. வேதத்தை ஊன்றிப் படிப்பவர்களுக்கு கிறிஸ்துவின் மரணத்துக்குப் பிறகு புதிய ஏற்பாட்டுச் சட்டங்கள் அமுலுக்கு வந்தன என்றும், அதற்குப்பிறகு பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்கள் எடுபட்டுப் போயின என்பதும் விளங்காமற்போகாது. கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நியாயப்பிரமாணம் ஓர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதையும் அவர் மாசற்ற இரத்தம் புதிய உடன்படிக்கையைப் பரிசுத்தப்படுத்தி இருக்கிறதையும் எபிரேயர் 9,10, அதிகாரங்கள் நமக்குக் கூறுகின்றன. பழையதை அகற்றாமல் புதியதை புகுத்துவது முடியாது என்பது நாம் அறிந்த உண்மையே!

அப்படியானால் பழைய ஏற்பாடு தேவனுடைய வார்த்தை அல்லவென்றும் அவை நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் பொருளா? அப்படி யாரும் நினைத்து விடக்கூடாது. இன்று பழைய பிரமாணம கிறிஸ்தவர்களாகிய நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை என்றாலும் அது தேவனுடைய வார்த்தை என்பதில் எமக்குக் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. இன்றைக்கு வாழ்கிற நமக்கு அதில் ஏராளமான படிப்பினைகளும் ஒழுக்க நெறிகளும் காணக் கிடக்கின்றன. நாம் அதை வாசித்து பயன் அடைய வேண்டும். ஆனால் **இவைகளெல்லாம் திருஷ்டாந்தகளாக அவர்களுக்கு சம்பவித்தது, உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படி எழுதப்பட்டிருக்கிறது**. என்றும் (1கொரி 10:11) ''**முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது என்றும்** (ரோமர் 15:14) பவுல் கூறுவதின் கருத்து என்னவென்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

பழைய ஏற்பாடு கிறிஸ்தவர்களாகிய நம்மைக் கட்டுப் படுத்துவதில்லை என்று சொல்கிறபடியினாலே எல்லா விதமான பாவங்களையும் கூசாமல் செய்யலாம்; கேள்வி கேப்பாடு இல்லை என்று பொருளா? அல்லவே அல்ல. பழைய ஏற்பாடு நம்மைக் கட்டுபடுத்தாது என்பதால் நம்முடைய வாழ்க்கைக்கு வழி காட்டும் நெறிமுறையே கிடையாது என்றும் பொருளில்லை. இயேசுகிறிஸ்துவும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் அதற்கு ஒப்பானதும் சொல்லப்போனால் அதைவிட ஆழமான கருத்துள்ள சட்டதிட்டங்களை வகுத்து தந்துள்ளனர், அதில் ஒன்றே ஒன்று மட்டும்

விதிவிலக்கு. அது ஓய்வு நாள் பிரமாணம். தொழுகைக்குரிய அந்த ஓய்வு நாள் மாற்றப்பட்டு வாரத்தின் முதலாம் நாள் தொழுகைக்குரிய நாளாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (அப் 20:7) சிலர் கூறுவது போல இந்த ஏற்பாடு பிற்காலத்து இடைச் செருகல் அல்ல, பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடே.

இயேசு கிறிஸ்துவும், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும், கொலை செய்யாதிருப்பாயாக, திருடாதிருப்பாயாக, விபச்சாரம் செய்யாதிருப்பாயாக போன்ற சட்டங்களையும் கற்பித்திருக்க படி-யால் புதிய ஏற்பாட்டுப் பிரமாணங்கள், பழைய ஏற்பாட்டின் தழுவல் அல்லது தொடர்ச்சி என்று எண்ணி விடக் கூடாது. இது போன்ற இன்றியமையாத மனித நேயச் சட்டங்கள் எந்தச் சமயத்திலும் எந்த நாட்டிலும் இருக்க வேண்டிய தார்மீக நீதிச் சட்டங்கள்தான்.

எடுத்துக் காட்டாக, ஒரு நாட்டை ஆளும்அதிகாரம் கைமாறி சட்டதிட்டங்கள் மாற்றப்படுகிறது என்று வைத்துக் கொள்-வோம். ஏற்கனவே இடம் பெற்றிருந்த பல சட்டதிட்டங்கள் புதியவைகளிலும் கூடக் காணப்படலாம்.

ஆனால் மக்கள் அதைக் கடைப்பிடிப்பது அது பழைய ஆட்சியில் இருந்த காரணத்தால் அல்ல; புதிய பிரமாணத்தில் இடம் பெற்றிருக்கிறபடியினாலேயே, அதைக் கடைப் பிடிக்க வேண்டியிருக்கும். அவைகளில் சொல்லப்பட்டிருக்கிற சட்டதிட்-டங்களும், தனிமனிதனின் உரிமைகளும் பழைய சட்டதிட்டத்தில் இருந்ததனால் புதியதில் இடம் பெற்றிருக்கிறது என்று அல்ல. எந்த ஒரு நாடும், எந்தக் காலத்திலும் சட்டதிட்டங்களை வகுக்-கும் போது இது போன்ற இன்றியமையாத சட்டங்கள் கட்டாயம் இடம் பெற்றே தீரும்.

உதாரணத்துக்கு இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் காணப்படுகிற சில ஷரத்துகள் அண்டை நாடுகளில் அமுலில் உள்ள அரசியல் நிர்ணயச் சட்டத்திலும் கூட இடம் பெற்றிருக்-கலாம். அந்த ஷரத்துகளை நீங்கள் கைக் கொள்ளும் போது நாம் மற்ற நாட்டுச் சட்டத்தை கடைப்பிடிக்கிறோம் என்று பொரு-ளில்லை. இப்படிப்பட்ட மனித நேயச் சட்டங்கள் நாகரீகமடைந்த எல்லா நடுகளிலும் இடம் பெற்றே இருக்கும். அது ஒன்றும் விநோத மானது அல்ல.

இப்பொழுது பத்து கற்பனைகளை எடுத்துக் கொண்டு அவைகளுக்கிணையாகவும் மேலாகவும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்-

துவும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று ஒப்பிட்டுப் பார்ப்போம்.

**ப.ஏ. 1 என்னையின்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்** *(யாத் 20:3)*

**பு.ஏ.** எல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு அவர் எல்லார் மேலும் எல்லோரோடும் உங்கள் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர் *(எபே 4;6)* மேலும் *மத் 4:10; அப் 17:24-28; 1கொரி 8-5-6* ஆகிய வசனங்களையும் காண்க.

**ப.ஏ. 2 மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்** *(யாத் 20:4)*

**பு ஏ.** பிள்ளைகளே, நீங்கள் விக்கரகத்துக்கு விலகி உங்களைக் காத்துக் கொள்வீர்களாக *(1யோவான் 5:21)* மேலும் *அப் 14:15; 17:29; ரோமர் 1:20-25; 1கொரி 10:7* ஆகிய வசனங்களையும் வாசியுங்கள்

**ப.ஏ.3 உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக** *(யாத் 20:7)*

**பு.ஏ.** அன்றியும் பொய்யாணையிடாமலும், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

நான் உங்களுக்கு சொல்கிறேன் பரிச்சேதம் சத்தியம் பண்ண வேண்டாம். வானத்தின் பேரில் சத்தியம் பண்ண வேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம்.

உன் சிரசின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம். அதன் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே.

உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். *(மத் 5:33:37; யாக் 5:12).*

**ப.ஏ. 4 ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக**

**பு.ஏ.** *(யாத் 20:8)* ஏற்கனவே நாம் குறிப்பிட்ட பிரகாரம் முன்பு தொழுகைக்குரிய நாளாக ஓய்வு நாள் இருந்ததை மாற்றி வாரத்தின் முதல் நாள் தொழுகைக்குறிய நாளாக மாற்றப்பட்டிருக்கிறது. வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்-

கித்தான் (அப் 20:27) 1கொ16,2 அப் 2:1,42, ஆகியவைகளையும் வாசித்து சிந்திக்க.

**ப.ஏ. 5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக** (யாத் 20:12)

பு.ஏ. பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் இது நியாயம் உனக்கு நன்மையுண்டாயிருப்பதற்கும் பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும். உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது. (எபே 6:1:3, கொலோ 3:20)

**ப ஏ. 6 கொலை செய்யாதிருப்பாயாக** (யாத் 20:13)

பு.ஏ. கிறிஸ்து கொலை செய்வதைக் கண்டிப்பதோடு நில்லாமல் ''தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்றும் (மத் 5:21'22) ''தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான். மனுஷ கொலை பாதகன் எவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திருக்காது என்று அறிவீர்கள் என்றும் (1யோவான் 3:15) அதில்லாமல் அப்போஸ்தலன் பவுல் தயாரித்த மாமிசத்தின் கிரியைகள் அடங்கிய பட்டியலில் கொலையையும் உள்ளடக்கியிருக்கிறார் (கலா 5:19-21) 1பேதுரு 4:15ம் காண்க.

**ப.ஏ. 7 விபசாரம் செய்யாதிருப்பாயாக** (யாத் 20:14)

பு ஏ. இயேசுகிறிஸ்து விபசாரத்தைக் கண்டிப்பத்தோடு நில்லாமல் அதன் ஊற்றுக் கண்ணையே அடைத்துப்போடவேண்டும் என்று வற்புறுத்துகிறார். ''ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று என்கிறது மத் 5:28. மேலும் அதே புத்தகம் 19:9ல் விபசாரத்துக்குப் புதியதொரு விளக்கமும் கொடுக்கிறார். அப்போஸ்தலன் பவுல் கூட விபசாரத்தைக் கண்டித்து எழுதியிருக்கிறார். (1கொரி 16:9,10 கலா 5:19-21)

**ப.ஏ. 8 களவு செய்யாதிருப்பாயாக** யாத் 20:15

பு.ஏ. திருட்டைப்பற்றியும் திருடர்களைப்பற்றியும் புதிய ஏற்பாட்டில், பல இடங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் நன்றாக பளிச்சென்று விளங்கிக் கொள்ளுகிற மாதிரி எபேசியர் நிருபத்தில் சொல்லியிருக்கிறது. ''திருடுகிறவன் இனித் திருடாமல் குறைச்ச-

லுள்ளவனுக்குக் கொடுக்கத் தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி தன் கைகளினாலே நலமான வேலை செய்து, பிரயாசப்படக் கடவன்''. (எபே 4:28; 1கொரி 6:10)

**ப.ஏ.9 பிறனுக்கு விரோதமாய்ப் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயா** (யாத் 20:16)

**பு.ஏ.** பவுல் அப்போஸ்தலன் பல்வேறு தரப்பட்ட மக்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார் வயதான ஸ்திரீகளுக்கு ''முதிர் வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக் கேற்றவிதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப் படாதவர்களாயிருக்கவும் இருக்க வேண்டும்'' என்று அறிவுரை கூறுகிறார். (தீத்து 2:3) சபையின் மூப்பர்களுக்கெதிராக செய்யப்படும் பிராதில் உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு தீர விசாரிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது (1தீமோ 5:19), வெளி 22:15

இங்கே அவதூறு பண்ணாதவர்கள் என்ற சொற்றொடருக்கு ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளைப்பரப்பி ஒருவனுடைய நன்மதிப்பைச் கெடுத்தல் என்று பொருள் கொள்ளலாம். இந்த ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை நிரூபிக்க பொய்ச்சாட்சிகள் வேண்டியிருக்கும்.

ப.ஏ. 10 **இச்சியாதிருப்பாயாக** யாத் 20:17

(இச்சிப்பது என்றால் சுயநலமிக்கவர்களாய் அடுத்தவனுடையதை அநியாயமாய் பெற்றுக் கொள்ளும் விருப்பம் என்று கூறலாம்)

**பு.ஏ.** 1கொரி 8:9ல் பொருளாசைக்காரர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது என்கிறது. மூப்பர்களாகுதற்குரிய தகுதிகளில் பொருளாசையின்மை என்பதும் ஒன்று. (1தீமோ 3:3) பவுல் மேலும் ''பண ஆசை எல்லாத் தீமைகளுக்கும் வேராக இருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் (1தீமோ 6:10) ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் நமது இரட்சகரும், கர்த்தருமாகிய கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் இருக்கிறோம். அதை யாக்கோபு சுயாதீனப் பிரமாணம் என்றும், பூரணப் பிரமாணம் என்றும் கூறுகிறார் (யாக் 1:25) அது பழைய பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை விட பெரிய வாக்குறுதிகளையும், பெரிய நம்பிக்கையையும் நமக்கு அளிக்கிறது. அப்படியிருக்கும் போது நாம் குறைவான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள ஏன் வாஞ்சிக்க வேண்டும்?

J.C. சோட்

# வதந்திகளைப் பரப்பாதீர்!

சிறு பிள்ளைகள் ஒரு விளையாட்டு விளையாடுவார்கள். அவர்கள் வட்டமாக உட்கார்ந்து கொள்வார்கள் அதில் தலைமையாயிருக்கிற பிள்ளை தனக்கு அடுத்து இருக்கிற பிள்ளையின் காதில் ஏதோ கிசுகிசுக்கும். அவள் அதைத் தனக்கு அடுத்து இருக்கும் பிள்ளைக்கு இரகசியமாகச் சொல்லுவாள். இப்படியே அந்தச் செய்தி வட்டத்தில் உட்கார்ந்திருக்கிற ஒவ்வொருக்கும் இரகசியமாகச் சொல்லப்படும்.

இறுதியாக முதல் முதலில் செய்தியை அனுப்பிய பிள்ளையிடம் வந்து சேரும். அவள் உடனே எழுந்து நின்று, தான் ஆரம்பத்தில் சொல்லியனுப்பிய செய்தி என்ன என்றும், கடைசியாக தனக்கு வந்து சேர்ந்த செய்தி என்னவென்றும் சொல்லுவாள். உடனே பிள்ளைகள் எல்லாம் சேர்ந்தாற் போல ''கொல்'' என்று சிரிப்பார்கள்.

ஏனெனில் முதல் செய்திக்கும், இறுதிச் செய்திக்கும் சம்பந்தமே இருக்காது அவ்வளவு மாற்றம்!

பிள்ளைகள் ஆடும் இந்த விளையாட்டுக்கு வதந்தி பரவுதல் என்று பெயர். இதில் நமக்கு ஒரு பாடம் உண்டு. மக்கள் ஒரு சிலரைப்பற்றி வதந்திகளை உருவாக்கி அதைத் தன் தோழிக்குச் சொல்ல இப்படியே கதை உருமாறி சில விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது.

வதந்தி பரப்பும் விளையாட்டு ஒருவேளை தமாஷாகச் சிரித்து மகிழ்வதற்கு உதவலாம். ஆனால் நிஜ வாழ்க்கையில் அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு எவ்வளவு பெரிய துக்கத்தைக் கொண்டு வரும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதற்கு இணையான இன்னொரு துர்க்குணம் கோள் சொல்லுதல் ஆகும். உன் ஜனங்களுக்குள்ளே அங்கும் இங்கும் கோள் சொல்லித் திரியாயாக பிறனுடைய இரத்தப் பழிக்கு உட்பட வேண்டாம் என்று எச்சரிக்கிறது (லேவி 19:16) ஏனெனில் கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதர்களையும் பிரித்து விடுகிறான் என்று நீதி மொழிகளில் சொல்லப்பட்டிருக்கிறது (நீதி 16:28). இப்படிப்பட்ட குணம் படைத்தவர்கள், சோம்பல் உள்ளவர்களாய் வீடு வீடாகத் திரியப்பழகுவார்கள். சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல அலப்புகிறவர்களாயும், வீணலுவற்காரராயும், தகாத காரியங்களைப் பேசுகிறவர்களுமாயிருப்பார்கள் 1தீமோ 5:13.

அதனால் தான் அப்படிப்பட்ட குணமுள்ளவர்களிடத்தில் நட்புக் கொள்ளாதே என்று சாலமோன் ஞானி எச்சரிக்கிறார் (நீதி 20:19) இந்த இழி குணங்களெல்லாம் கேடான சிந்தைக்கு தேவனால் ஒப்புக் கொடுக்கப்பட்ட துன்மார்க்கக்காரரிடம் காணப்படுகிற கெட்ட பண்புகள் (ரோமர் 1:29)

ஆனால் ஒரு நல்ல கிறிஸ்தவப் பெண்மணி எப்படி இருக்க வேண்டும்? அவள் வதந்திகளைப் பரப்புகிறவளாகவோ, கோள் சொல்லி சண்டை மூட்டுபவளாகவோ இருக்கக்கூடாது. மற்றவர்களுடைய காரியங்களை அதுவும் தீதான காரியங்களைப் பேச நேர்ந்தால் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துப் பேசவேண்டும். ஒரு விஷயத்தைப் பேசுமுன்பு கீழ்வரும் கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுப் பார்த்துக் கொண்டால் நலமாக இருக்கும்.

1) **அது உண்மையா?** என் காதுக்கு வந்த செய்தி யாரோ சொன்னது தான் அவர் என்ன நோக்கத்தோடு சொன்னார் என்று நமக்குத் தெரியாது. அதை நன்கு உறுதிப்படுத்திக் கொள்ளுகிறவரை மற்றவர்களுக்கு அதைப் பரப்பக்கூடாது.

2) **அது மனித நேயமுள்ள செயலா?** நான் கேள்விப்பட்ட செய்தி உண்மையாக இருந்தாலும் அதை மற்றவர்களிடத்தில் சொல்வது சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மை தருமா? நல்ல செய்தி எனில் அதை எல்லாரிடமும் சொல்லலாம்; தவறில்லை ஆனால் அந்தச்செய்தி சம்பந்தப்பட்டவருடைய வாழ்க்கையை பாதிக்கக் கூடியதாகவோ அல்லது துன்பத்தையும் இழப்பையும் கொண்டு வரும் என்ற நிலை இருந்தாலோ அந்த செய்தியை முடிந்த அளவு மூடி மறைப்பேன். ஒருவேளை அது உண்மையாக இருந்தாலும் கூட மௌனமாக இருப்பேன்.

3) **அது தேவை தானா?** சில வேளைகளில் கெட்ட செய்திகள் உண்மையாக இருந்தால் அந்தச் செய்தியைச் சம்பந்தப்பட்டவர்களின் நன்மைக்காகவும் திருந்தி நடப்பதற்காகவும் நாம் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பாரத்தோடும், கரிசனையோடும் பொறுமையாய் சம்பந்தப்பட்டவர்களின் நன்மைக்காகத் தான் சொல்லுகிறோம் என்ற எண்ணம் தோன்றும் வகையிலும் மனதைப் புண்படுத்தாமலும் சொல்ல வேண்டும். சம்பந்தப்பட்டவர்களை மட்டம் தட்டுவதற்கு நமக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பு என்ற எண்ணத்தில் அதைப் பெரிதுபடுத்தி ஊரைக் கூட்டக்கூடாது நமக்கும் குடும்பமும் பிள்ளைகளும் இருக்கின்றன என்பது ஞாபகமிருக்கட்டும்.

**பெட்டி பர்ட்டன் சோட்**

# புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டு அமைக்கும் பணிக்கு நேசக்கரம் நீட்டுவீர்

ஒருவர் உங்களுக்குத் தண்ணீர் கலந்த பாலைக் கொடுக்கிறார் என வைத்துக் கொள்வோம். அதை எப்படி ஏற்றுக்கொள்வீர்? பாலென்று தான் ஏற்றுக் கொள்வீர்கள். வேறொருவர் உங்களுக்கு கலப்பட மில்லாத சுத்தமான பால் கொடுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அதை எப்படி ஏற்றுக் கொள்வீர்கள்? அதையும் நீங்கள் பால் என்று தான் ஏற்றுக்கொள்வீர்கள். ஆனால் இரண்டுக்கும் வித்தியாசம் கண்டிப்பாக உண்டு. அவைகளை நீங்கள் பரிசோதித்துப் பார்த்தால் அதனுடைய தன்மைகள் தெரியும். கலப்படம் என்பது இப்பொழுது சர்வ சாதாரணமாகி விட்டது. அது மார்க்கத்தையும் விட்டு வைக்க வில்லை.

கிறிஸ்துவம் என்ற பெயரால் மக்கள் மீது திணிக்கப்படும் ஏராளமான உபதேசங்கள், சபைச் சட்டங்கள் கொள்கை முழக்கங்கள் கோட்பாடுகள் இவைகளை ''ஆராயப் புகுந்தால் தலைச் சுற்றுகிறது. அதை ஆராய்ந்து எது தான் உண்மை என்று கண்டு பிடிக்க முனைவோருக்கு மிஞ்சுவது குழப்பமே. எல்லோரும் வேதாகமத்திலிருந்து தான் சொல்லுகிறார்கள்' ஆனாலும் முரண்பாடு எது தான் உண்மை? ஒன்றுமே புரியவில்லையே என்று மக்கள் குழம்பி நிற்கிறார்கள்.

இருந்த போதிலும் தேவன் வேதாகமத்தில் சபையைப் பற்றியும், தொழுகை முறைப்பற்றியும், பெயர் மற்றும் கொள்கை உபதேசச் சட்டம், சபை நிர்வாகம், ஐக்கியம், சபையின் பணிகள் ஆகியவைகளைப் பற்றியும் தம்முடையக் கருத்தைச் சொல்லாமல் இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக மனிதர்கள் சபை பற்றிய தேவனுடைய அனாதித் தீர்மானத்தைத் சிதைத்து தாங்கள் விரும்புகிற சிலவற்றை உட்புகுத்தி கிறிஸ்துவின் சபையை மாசுபடுத்தி விட்டனர். இருந்தபோதிலும் சபையைப் பற்றி தேவனுடைய வடிவமைப்பை அடையாளம் கண்டு கொள்வது கஷ்டமான காரியமல்ல. ஆதி கிறிஸ்தவர்கள் அதை புரிந்து கொண்டு செயல் பட்டார்கள். ஆகையால்தான் அவர்கள் ஒரே சபையின் அங்கங்களாக இருந்தனர். அவர்கள் தேவனுடைய சத்தியத்தை மட்டும் போதித்து எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான கர்த்தருடைய சபையை நிறுவினார்கள் அங்கே ஒரே விதமான உபதேசத்தைப் போதித்து ஒரே விதமாய் சபையின் நிர்வாகத்தை நடத்தி வந்தனர். இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் மத்தியில் காணப்படும் வித்யாசமான போதனைகள், முரண்பாடுகள் ஆகியவற்றுக்கு கணக்கே கிடையாது.

லூக்கா எட்டாம் அதிகாரத்தில் கிறிஸ்து தேவனுடைய வார்த்தையை நாம் நிலத்திலே விதைக்கிற விதைக்கு ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அப்போஸ்தலர்கள் ஆரம்ப நாட்களில் அந்த விதையை மனிதர்களுடைய இருதயமாகிய நிலத்தில் விதைத்தார்கள். அது வளர்ந்து பெரியதாகி ஒரே விதமான, வேறுபாடு இல்லாத கிறிஸ்தவர்களை உருவாக்கிற்று. கர்த்தர் 'கட்டுவேன்' என்று வாக்களித்ததும் அவர் உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளன்று நிறுவியதுமாகிய அந்த ஒரே சபையில் அங்கம் வகித்தார்கள். (மத் 16:18; அப் 2:47) தேவனுடைய திட்டத்தின் படி, ஒவ்வொரு ஜாதி விதையும், தங்கள் தங்கள் விதையை உடைய கனிகளைக் கொடுக்க வேண்டும் (ஆதி 1:12) அப்படிப் பார்க்கும் போது ஆதியிலே அப்போஸ்தலர்கள் விதைத்த தேவனுடைய வசனமாகிய விதை விளைவித்ததைப் போலவே இன்றைக்கும் தேவனுடைய வசனமாகிய விதை விதைக்கப்பட்டால் அதே விதமான ஐக்கியமுள்ள, பிரிவினையில்லாத கிறிஸ்தவர்கள் தானே உருவாக வேண்டும்?. ஆனால் நாம் காண்பது வித்தியாசமாக இருக்கிறதே காரணம் என்ன?

இன்றைக்கு பலர் விதைப்பது தேவனுடைய சுத்த சுவிஷேசம் என்கிற விதை அல்ல, என்பதை அநேகர் கண்டும் காணமல் இருக்கின்றனர். இந்த மெத்தனமான போக்கைப் பயன்படுத்திக் கொண்டு சில சுயநலமிகள் தேவ வசனத்தோடு தங்கள் பாரம்பரியம், சித்தாந்தங்கள், கோட்பாடுகள் என்று எதை எதையோ கலந்து விதைத்துக் கொண்டிருக்கின்றனர். வேதாகமத்தை அலட்சியம் செய்தும் அதன் போதனைகளை அறியாமலும் அதே சமயத்தில் தாங்கள் பக்திமான்கள் என்று காட்டிக் கொள்ள விரும்பும் அநேகருக்கு, போதகர்களும் பிரசங்கிமார்களும் தவறான உபதேசத்தைக் கூடப் போதிக்க முடியும், போதிக்கிறார்கள் என்பது தெரிந்தும் அதைப் பற்றி கவலைப்படுவதில்லை. பல்வேறு சமயப் பிரிவைச் சேர்ந்த போதகர்கள் வேதாகமத்தில் உள்ளதை முழுமையாகப் போதிக்காமல் ஏதோ உணவுக்கு ஊறுகாய் தொட்டுக் கொள்வதைப் போல ஆரம்பத்திலோ கடைசியிலோ ஒரு இரண்டு வசனங்களைச் சொல்லி முடித்து விடுகிறார்கள். வேதாகமத்தைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் கவலைப்படாமல் உலகப் பிரகாரமான நன்மைகளின் நோட்டமாக இருக்கிற கிறிஸ்தவர்களுக்கு அப்படிப்பட்ட பிரசங்கங்களைத்தான் ஜீரணிக்க முடியும், உண்மை 'போர்' அடிக்கும்.

ஆரம்ப நாட்களில் அப்போஸ்தலர்கள் உயிரோடிருந்த நாட்கள் வரை சபை பற்றிய தேவனுடைய அனாதித் தீர்மானத்தின் படி தேவ வசனத்தை விதைத்து கிறிஸ்தவர்களை உருவாக்கி வந்தார்கள். அப்பொழுதே பிற்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதை தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார், ''பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யர்களுடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்றும் (1 தீமே 4:1)

''ஏனெனில் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும் என்றும் (2 தீமோ 4,3, 4) அப்பொழுதே எச்சரித்தார்கள்.

மேலும் பவுல் அப்போஸ்தலன் எபேசு சபையின் மூப்பர்களுக்கு எழுதும் போது ''ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தனது சபையை மேய்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்.

''நான் போன பின்பு மந்தையைத் தப்ப விடாத கொடிதான ஓநாய் உங்களுக்குள்ளே வரும்''.

''உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்''. அப் 20:28-30) என்று உஷார் படுத்துகிறார்.

ஒரு கால கட்டத்தில் பொதுமக்கள் வேதகமத்தை வாசிப்பதற்கு ரோமன் கத்தோலிக்க போப்புக்கள் தடை உத்தரவிட்டதும் அன்றி கிடைக்கிற வேதாகமங்களையெல்லாம் ஒன்று சேர்த்துத் தீயிட்டுக் கொழுத்தி அட்டகாசம் செய்தனர். பொது மக்கள் வேதாகமத்தை வாசிப்பதை எவ்வளவு தடை செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்தார்கள். வேதாகமத்தை வியாக்கியானம் செய்யும் உரிமம் தங்களுக்கு மட்டுமே உண்டு என்று அவர்கள் நினைத்தனர். இதனால் ஆன்மீக வாழ்க்கை இருளடைந்தது. காலம் செல்லச் செல்ல மக்களுக்கு வேதாகமம் என்ன சொல்லுகிறது என்றே தெரியாமல் குருமார்களும் போப் ஆண்டவரும்என்ன சொல்லுகிறார்களோ அதுவே வேதம் என்று எண்ணி பல தவறான

போதனைகளை பின்பற்றி நடந்தனர். ஆனால் அவைகள் மனிதர்களுடைய கற்பனையே அன்றி வேறல்ல. அவைகளில் சில: கர்த்தருடைய பந்திக்குப் பதிலாக பூஜை போடுதல், பரிசுத்த தண்ணீர், குருமார்கள் திருமணம் செய்து கொள்ளத்தடை, திராட்சைரசம் இரத்தமாக மாறுவதும், அப்பம் இயேசுவினுடைய சரீரமாக மாறுவதும், இசைக்கருவிகள் அறிமுகம், ஞானஸ்நானத்தில் தெளிப்பு முறை, குழந்தைகளுக்குத் திருமுழுக்கு மார்க்க ரீதியான திரு விழாக்கள், கிறிஸ்மஸ், உயிர்த்தெழுந்த திருநாள், சபைப் போதகர்களை **தகப்பன்** என்று அழைப்பதும் ஒருவரைக்காட்டிலும் மற்றவர்கள் உயர்ந்தவர்கள் என்பது போன்ற ஏராளமான இடைச்செருகல்கள்.

ஆரம்பத்தில் ரோமன் கத்தோலிக்கர்களுக்குள் தோன்றிய இவ்வியாதி அவர்களிடமிருந்து பிரிந்து வந்த சீர்திருத்தச் சபைகளையும் பற்றிக் கொண்டது. நாளுக்கு நாள், நாட்கள் பெயராலும் தலைவர்கள் பெயராலும், நிகழ்ச்சியின் பெயராலும் பிரிந்து தங்களுக்குத் தோன்றின உபதேங்களைப் போதித்து விசுவாசிகளை பிரித்து வைத்து இயேசுவின் சரீரத்தைக் கூறுபோட்டு சத்துருவாகிய சாத்தனிடம் ''சபாஷ்'' பெற்றனர்.

ஆயிரத்திதொளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாக இயேசு தமது சபையைக் கட்டின விஷயம் மறந்து போகும் அளவுக்குப் பலபல கள்ளபோதகங்கள் உள் நுழைந்து சபையின் நிஜமான தன்மையை உருமாறச் செய்து விட்டது. இருப்பினும் புதிய ஏற்பாட்டைக் கவனமாகப் படித்துப் பார்த்தால் அதை அடையாளம் கண்டு கொள்வது கடினமல்ல, அதனுடைய பெயர், நிர்வாக முறை, தொழுகை, கைக்கொண்ட பழக்க வழக்கங்கள் விசுவாச உபதேசச்சட்டம், சபையின் தலைவர் யார், ஒருவர் எப்படி அச்சபையில் அங்கமாகலாம் என்பன போன்றவைகள் தெளிவாகச் சொல்லப்பட்டிருகின்றன. பலர், கத்தோலிக்க சபைமற்றும் சீர்திருத்த சபைகள் தான் ஆதி சபைகள் என்று, தவறாக எண்ணி கொண்டிருக்கிறார்கள். உண்மையான கிறிஸ்துவின் சபை, மனிதரால் தோற்றுவிக்கப்பட்ட சபைகள் உருவாவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது.

அப்போஸ்தலர் விதைத்த தேவவசனமாகிய விதை இன்றும் கூட அதே அளவு வல்லமையுள்ளதாகவும் அதே போன்ற பலனைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கிறது. கிறிஸ்தவ அறம் தழைத்தோங்க வேண்டும். என்று விரும்பும் சான்றோர்கள் அனைவரும் ஒரு அணியில் நின்று, சத்தியத்தை ஆய்வு செய்து, மனிதர்களின்

இடைச் செருகல்களையெல்லாம் களைந்து போட்டு, முதலாம் நூற்றாண்டில் காணப்பட்ட தூய கிறிஸ்தவத்தை மீட்டு அமைக்க முன் வர வேண்டும். இதில் தனி மனிதனுடைய அல்லது குழுவினருடைய ஆலோசனைகளை எல்லாம் புறக்கணித்து விட்டு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட பரிசுத்த வான்கள் எழுதித்தந்துள்ள புதிய ஏற்பாட்டையே நாம் அளவு கோலாக வைத்துக் கொள்ள வேண்டும் புதிய ஏற்பாடு சொல்லாத அல்லது அதில் காணப்படாத எந்த ஒரு நடைமுறையையும், கொள்கை கோட்பாடு ஆதாரங்களையும் அறவே ஒழித்து விட்டு வேதாகமம் சொல்வதையே ஏற்றுக்கொள்ள வேண்டும். முதல் நூற்றாண்டில் ஆதித்திருச்சபைக்கும், கிறிஸ்தவப் பெருமக்களுக்கும், புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டங்கள் ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய அனைத்தையும் தர முடிந்தது என்றால் இன்றைக்கு மட்டும் ஏன் சிற்றறிவு படைத்த மனிதனுடைய ஞானத்தை தேவ ஞானத்தோடு கலந்து கர்த்தரை அவமதிக்க வேண்டும்? அசல் இருக்கும் போது போலிகளைத் தேடிச் செல்லுவது ஏன்? சிந்திப்பீர்.

**சன்னி டேவிட்**

## இரட்சிப்பின் திட்டங்கள்

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அப்போஸ்தலர்கள் வேதாகமத்தை எழுதினார்கள். (2பேதுரு 1:20-21) வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் இரட்சிப்பின் திட்டங்களைத் தருகிறார் ;

1. **விசுவாசம்** இன்றி தேவனைப் பிரியப்படுத்த இயலாது (எபி 11:6).
2. எல்லா மனிதர்களும் **மனந்திரும்பவேண்டும்** என தேவன் கட்டளையிடுகிறார். (அப் 17:30).
3. இரட்சிப்பு அடைய வாயினாலே **அறிக்கை** செய்ய வேண்டும். (ரோமர் 10;10)
4. **ஞானஸ்நானம்** இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது (1பேதுரு 3:2).

தேவனுடைய கட்டளைகளுக்கு இணங்கி மரண பரியந்தம் உண்மையாக இருந்தால், ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளலாம். வெளி2;10.

# நல்லவர்களை நாடி கேடுகள் வருவதேன்?

ஒரு விபத்து பற்றிய செய்தியை நீங்கள் படிக்காத நாளை-யோ, அல்லது அதை ஒலிபரப்பாத வானொலிச் செய்தியையோ நீங்கள் கேட்டதுண்டா? தினமும், பத்திரிகையும் வானொலிப் பெட்டியும் நமக்கு அளிக்கும் செய்தி விருந்திலே முக்கியமான பங்கை எடுத்துக் கொள்ளுவது இந்த விபத்து தானே.

இத்தகைய துயர சம்பவங்களைப் படித்தும் கேட்டும் வரும் மக்களில் சிலர் மனதிலே, ''கடவுள் இருக்கிறாரா?'' என்ற வினா எழுகிறது. ''கடவுள் சர்வ வல்லமை படைத்தவரும், சகலரையும் நேசிப்பவராக இருப்பின், இப்படிப்பட்ட வேதனைகளையும் துன்பங்களையும் இவ்வுலகில் அனுமதிப்பது ஏன்?'' என அவர்கள் கேட்கிறார்கள். துயரங்கள் என்ற பிரட்சனையை துடைத்தெறிய இவ்வுலகம் தரும் தீர்வு எதுவும் இல்லை கிறிஸ்தவம் இதற்கு நிவாரணம் தருகிறது.

தமது சாயலில் மனிதனை தேவன் படைத்தார். என ஆதியாகமம் 1:27 வசனம் கூறுகிறது. தேவனின் சாயலில் மனிதன் படைக்கப்பெற்றிருப்பதால், நல்லது கெட்டதைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தையும் அவன் அடைந்துள்ளான். ஆதிமனிதன் ஆதாமைத் கொடர்ந்து, எல்லா மக்களும் பாவஞ் செய்வதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். பாவத்தின் விளைவும் மனித குலத்தைத் தொற்றிக் கொண்டது. இன்று நாம் காணும் பல துன்பங்களும் மனிதனுடைய பாவத்தின் நேரிடை பலன்களாகும். பாவஞ்செய்யும் சுதந்தரத்தை சிலர் பயன்படுத்துவதின் காரணமாக அதில் சம்பந்தப்படாத அப்பாவிகளான பலர் பாதிக்கப்படுகின்றனர். அப்படிப் பட்ட துன்மார்க்க மனிதர்களுடைய செயல்களே பாவத்திற்குக் காரணம்; தேவன் இதற்கு பொறுப்பல்ல.

மனிதனின் பலவித துன்பங்களுக்கு நமது எதிரியாகிய சாத்தானும் காரணமாகிறான். கோதுமையோடு களைகளும் வளர்ந்தது பற்றிய உவமையை இயேசு விவரிக்கையில், களைகளை விதைத்து நிலத்தைப் பாழாக்கியவன் ஒரு சத்துரு என்கிறார். (மத்தேயு 13:28) யோபுவைப் போன்ற நீதிமானாகிய மனிதர்களையும் கூட கொடூரமான முறையில் சித்திரவதை செய்வதில் சாத்தான் காணும் இன்பத்தைப்பற்றி யோபுவின் புத்தகம் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

தேவன் பாவத்தை வெறுக்கிறார். பாவஞ்செய்வோரின் பேரில் தேவன் நீதி செலுத்துவதை வேதாகமம் முழுவதும் நாம் காண முடிகிறது. தன் நிலத்தை விற்று ஆண்டவருடைய ஊழியத்துக்குச் செலுத்தினதற்காக மற்றவர்கள் தன்னை மெச்சீர்

கொள்ள வேண்டும் என்று நினைத்த சப்பீராள் தம்பதிகள் கிரயத்தின் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய்யுரைத்ததினால் சடுதியில் செத்து விழுகின்றனர் (அப்.5). தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட இஸ்ரவேலரை மீண்டும் மீண்டுமாக தேவன் அழைத்தார். ஆனால் அவர்களோ பலமுறை செவிசாய்க்க வில்லை. இன்றைய உலகிலும் சில துயர சம்பவங்கள் தண்டனையாக தேவனால் அனுமதிக்கப்படக் கூடும்.

தேவன் அன்பானவர். மனிதனுடைய உண்மையான பிரச்சனை அவன் செய்யும் பாவங்கள் தானே அன்றி, துன்பங்கள் அல்ல. ''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' (யோவான் 3:16). பிரட்சனைகளின் தீர்வுக்காக தேவன் ஒன்றுமே செய்யவில்லை என நாம் நிச்சயமாகக் கூறிவிட முடியாது. ஏனெனில் கிறிஸ்துவை இங்கு அனுப்பியதே பிரட்சனைகளின் தீர்வுக்காகத்தானே!

பல சமயங்களில் துன்பங்களும் நன்மையான பயனளிப்பவைகளாக இருக்கின்றன. பவுல் ''தன்னுடைய மாமிசத்திலுள்ள முள்ளை'' அகற்ற தேவனிடம் மூன்று முறைகள் வேண்டியும், தேவன் அவனுக்கு எவ்வாறு பதில் அளித்தார் தேரியுமா? ''என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்'' என்று. (2:கொரி. 12:4). பவுல் எழுதுகிறார்: ''உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரிட்சையையும், பரிட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களிலே ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோமர் 5:3-5) துன்பங்கள் நம்மை துவண்டுப் போகச் செய்கின்றனவா அல்லது திடங் கொள்ளச் செய்கின்றனவா என்பதே கேள்வி.

பாவிகளுக்காக தனது ஒரே குமாரனைப் பலியாகத் தந்த தேவன் தாமே பெரும் துயரத்தை அனுபவித்தவர் என்ற உண்மையை, நாம் துன்பங்களை எதிர் நோக்கும் சமயங்களில் எல்லாம் நினைவு கூர வேண்டும். நமது வேதனைகளையும் துயரங்களையும் அவர் உணரக்கூடியவர். (எபி 4:15) நமக்குப் புரிந்து கொள்ளக் கூடிய காரியங்களைக் கொண்டு, அவர் பேரில் நமது நம்பிக்கையை வைப்போம்.

**பாப் பிரிச் சார்டு** **எஸ்.எஸ். ராஜன்.**

# அற்புத அடையாளங்கள் நடைபெறுவது உண்மையா?

நண்பர்களே, விஞ்ஞானம் பிரமிக்கதக்க அளவில் வளர்ச்சி பெற்று சாதனை படைத்துக் கொண்டிருக்கும் போது இயேசுவின் பெயரால் அற்புத அடையாளங்கள் நடக்கிறதாக பெரும் விளம் பரங்களைச் செய்து ஊரைத் திரட்டி கடைசியில் வந்த பொது மக்கள் சலிப்படைந்து, தந்தை பெரியார் துரத்தி விட்ட மூட நம் பிக்கைகள் எல்லாம் கிறிஸ்தவத்துக்குள் புகுந்து விட்டது என்று பேசிக் கொண்டு போவதைக் கேட்கும் போது கிறிஸ்து மேல் மெய் விசுவாசமுள்ள மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

மெய்யாகவே இன்றைக்கும் அற்புத அடையாளங்கள் நடை பெறுகின்றனவா? பரிசுத்த வேதாகமம் அதைப் பற்றி என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம்.

மத் 10:1-8, லூக் 10:1-17, அப் 1:4,5,8; அப் 2:1-12 ஆகிய வசனங்களில் அற்புதங்கள் நடந்திருக்கிறதாக எழுதப்பட்டி ருக்கிறது. இன்றும் அவ்விதமாய் நடக்கிறது என்று சொல்வதில் என்ன தவறு? ஏன் சந்தேகிக்க வேண்டும்? அன்று நடந்த அற்-புதம் இன்றும் ஏன் நடக்காது? இயேசு நேற்றும் இன்றும் மாறா தவர் என்பது உண்மை தானே. அது போல அவருடைய அற்புத அடையாளம் மட்டும் மாறிப் போகுமா? என்பது அநேகருடைய கேள்விகளும் சந்தேகங்களும்.

ஆனால் 13-8-10 வசனங்களில் இவைகள் எல்லாம் ஒரு கால கட்டத்தில் ஓய்ந்து போகும் என்று பரிசுத்த ஆவியானவர் பவுல் மூலமாகச் சொல்லியிருக்கிறார். ஏனெனில் அது கொடுக்கப்பட்ட சூழ்நிலைகள் மாறி விட்டன. வசனம் உறுதிப்படுத்தப் பட்டாயிற்று மாற்கு 16:20; எபி 2:1-4, புதிய ஏற்பாடு பூரணப்பட்டு விட்டது. (யாக் 1:25) ஒரு வீடு கட்டி முடிக்கப்படும் வரையில் சாரங்களை பயன்படுத்துகிறோம். முழுமையாக கட்டப்பட்ட பிறகு சாரங்களை அகற்றிப் போடுகிறோம். அதே விதி இங்கேயும் பொருந்தும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூலோகத்தில் வாழ்ந்த நாட்களிலேயே கள்ளத் தீர்க்கதரிசிகளும் தோன்றி பெரிய அற்பு தங்களையும் அடையாளங்களையும் செய்வார்கள் என்று எச்சரித் திருக்கிறார் மத் 24:24.

அவைகளெல்லாம் பொய்யான அற்புதங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் (2 தெச 2:9) இயேசுவும், அப்போஸ்தலர்களும் தங்களிடத்தில் கொண்டு வரப்பட்ட எல்லா வியாதியஸ்தர்களையும், சொஸ்தமாக்கினார்கள். (அப் 5:6) அப்போஸ்தலருடைய எதிரிகள் கூட மறுத்தும் பேசமுடியவில்லை அப் 4:16).

ஆனால் இவர்கள் செய்யும் அற்புதங்கள் பாட்டி வைத்தியத்திலும் ஒரு ரூபாய்க்கு மூன்று ஊசி போடும் சாலையோர டாக்டர்களால் கூடச் சுகப்படுத்தி விடமுடியும். பெருநோய்களுக்கெல்லாம் இரகசியமாக மருத்துவம் பார்த்துக் கொள்வார்கள் எப்படியோ வண்டி ஓடுகிறது! பாவம் அவர்களுக்கு வயிறு ஒன்று இருக்கிறதே கொத்துவதற்கு அவர்களுக்குப் பெனில்லை; இரக்கவும் வெட்கப்படுகிறார்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள்.

**ஸ்டீபன் எஸ்ரா**

## தபசு காலமும். ஈஸ்டர் பண்டிகையும்.

கிறிஸ்து மரித்தார், உயிர்த்தெழுந்தார் என வேதாகமம் போதிக்கிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மரணத்தையும், உயிர்ப்பையும் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் நினைவு கூர்ந்தனர். (அப் 20;7)

புதிய ஏற்பாட்டில் ஈஸ்டர் பற்றி ஒரு வசனத்தைக் கூட காணமுடியாது. தேவன் அங்கீகரிக்காத, பல மனித பாரம்பரியங்களில் தபசு காலமும், ஈஸ்டர் பண்டிகையும் அடங்கும்

''மனிதனுடைய கட்டளைகளை உபதேசங்களாக போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்'' (மத் 15:9) என இயேசு கூறுகிறார்.

''நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்'' (மத் 28:20) என இயேசு கிறிஸ்து தனது அப்போஸ்தலர்களிடம் கூறினார்.

எனவே. தேவன் கட்டளையிடாதவைகளை நாம் அனுசரிப்பது குற்றமாகும்.

# சத்தியம் விலை மதிப்பற்றது!

''வேதாகமத்திற்குத் திரும்புவோம்! எருசலேமுக்குத் திரும்பு-வோம்!புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்துக்குத் திரும்பிச் செல்வோம்! மேலே கண்ட கோரிக்கைகளை முன்வைத்து, சத்தியம், ஒளி இவற்-நோக்கி பீடுநடை போட பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஒரு மகத்தான போரட்டம் நடை பெற்றது. இருளிலிருந்து ஒளியை நோக்கிச் செல்லும் போராட்டம் அது. ரோமானிய மதம் கொண்டு வந்த ஒரு சீர்திருத்த கண் துடைப்பை ஒதுக்கித் தள்ளி விட்டு, ஆதி சபையின் அழகிய எளிய சத்திய நடைமுறைகள் யாவற்றையும் அப்படியே பின்பற்ற வேண்டுமென்ற கோரிக்கைக்காக தீவிரமாக எழுச்சி பெற்று நின்ற இப்போராட்டமானது, அன்றிருந்த இருள் பாவம், அவமானம் என்ற சிறையைத் தகர்த்தெறியக் கூடியதாக இருந்தது. இன்றும் இந்நிலை பொருந்தும்.

''இருண்ட காலம் எவ்வாறு ஏற்பட்டது? இன்று மீண்டும் அது வரக்கூடுமா? தவறு மீண்டும் தலைதூக்கி ஆளமுடியுமா?'' என்றெல்லாம் கேள்விகள் கேட்கிறார்கள் சிலர். ஆம், நிச்சயமாக அவ்வாறு நடக்கக்கூடும். ஆவிக்குரிய காரியங்களில் இந் நூற்றண்-டிலேயும் பலர் குருடர்களகவே இருக்கின்றனரே! நீங்களும் நானும் இருளிலே வாழக்கூடும். இருண்ட காலத்தை உருவாக்கிய காரியங் களைக் கவனிப்போம்.

1. தேவனுடைய வார்த்தையைப் படிக்கவும் சத்தியத்தை தெரிந்து கொள்ளும் ஆர்வமும் அற்ற ஒரு அலச்சிய நிலை. கார்டினால்கள் என்ற மதக்குருக்களின் ஆலோசனைக்கு இணங்கி 1550ம் ஆண்டில் வேதாமகத்தைப்படிக்கத் தடைவிதித்தார் போப். வேதாகமத்தைப் பொறுத்த வரை இன்றும் மெத்தனம் காட்டும் சகோதரர்கள் சிலர் நம்மிடையே உள்ளளர். ஏனெனில் அதை அவர்கள் படிப்பதே இல்லை. தங்கள் பிள்ளைகளுக்கும் போதிப்ப தில்லை. **''என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்கார மாகிறார்கள்''** (ஓசியா 4;6) என தேவன் ஒரு முறை கூறுகிறார். வேதாகம ஞானமின்மை மீண்டும் இருண்ட காலத்தைக் கொண்டு வர முடியும்.

2. எட்டாம் நூற்றாண்டிலே கள்ளப் போதகர்கள் விளைவித்த கேடுகளுக்குக் கொஞ்சமும் குறைவின்றி, சத்தியத்திற்குத் திரை-போடும் இன்றைய கள்ளப் போதகர்களாலும் செய்யமுடியும்.

அதிக விழிப்புடனும் சத்தியத்தை வெளிப்படுத்துவதில் தீவிரமாக-வும் நாம் செயல்படாத பட்சத்தில்; ஆட்டுத்தோலைப் போர்த்திய ஓநாய்கள் தேவனுடைய மந்தையைப் பட்சித்து விடும் (மத் 7:15) சத்தியத்திற்கு விரோதமாக செயல்பட்டு வரும் கத்தோலிக்க மதத்-தையும், பிற பிரிவினை சபைகளையும் தோலுரித்துக் காட்டத் தயங்குகிற சில சகோதர ஊழியர்கள் ஆவிக்குரிய இருண்ட காலத்-தை மீண்டும் கொண்டு வர மறைமுகமாக உதவுகிறார்கள் என எடுத்துக் கொள்ளலாம்.

3. ஒழுக்கக் கேடும், தரங்கெட்ட குடும்ப வாழ்க்கையும், எந்த ரோமப் பேரரசின் சரிவுக்கும் அழிவுக்கும் காரணமாக இருந்தன-வோ, அதே நிலையை இன்றும் உருவாக்கி விடும். கேள்விக்கு இடமின்றி, இன்றும் நமது இல்லங்களில் ஒரு ஒழுக்கக்கேடான நிலையை சந்திக்கும் சந்தர்ப்பங்கள் பலஉண்டு. கட்டவிழ்த்து விடப் பட்ட இத்தகைய ஒழுக்கக் கேடுகளும் ஆபாசங்களும் ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் விடப்பட்ட சவாலாகும். இந்நிலை கண்டு சிலர் வெட்கப்படுவதோடு சரி; அதிர்ச்சியெல்லாம் இப்போது ஏற்படுவ-தில்லை. ''தெளிந்த புத்தி உள்ளவர்களாயும், வீட்டில் தரித்-திருக்கிறவர்களாகவும், தங்கள் கணவர்களையுப், மக்களையும் நேசிக்கிறவர்களாகவும்'' (தீத்து 2:5) தாய்மார்கள் இருக்கவேண்டு மெனச் சொல்லப்பட்டுள்ளது. தேவனைக் கனம் பண்ண வேண்டிய காரியத்தை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். ''பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம். . . . பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சை-யிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'' (எபே 6:1 4). பெற்றோர்கள் வேதாகமத்தின்படியான பெற்றோர்களாய் செயல்படும்வரை, பிள்ளைகளும் அதேபோல தேவனுக்கும் பெற்-றோர்களுக்கும் மரியாதை செலுத்தும் வரை பயங்கரமான விளைவு கள் நம்மை விட்டு விலகாது.

4. தேவனுடைய மக்கள் என தங்களை அழைத்துக் கொள்வோர் சிலரின் வெளிவேடமும் கோழைத்தனமும், பரிசுத்தமான வாழ்க்-கையின் பாதையை மறைத்து, சாத்தானுடைய படுகுழியில் நம்மைத் தள்ளி விடும். ஏற்கனவே, பல ''கிறிஸ்தவர்கள்'' சத்தி-யத்தை விட்டு விலகிப்போகும் நிலைக்கு எதிராகக்குரல் கொடுக்கத் தவறி விட்டனர். கிறிஸ்துவின் சத்திய வழியை மக்கள் மனதி-லிருந்து அகற்றிப்போடும் அளவிற்கு அபாயகரமான நடவடிக்கை-


(28-ம் பக்கம் பார்க்கவும்)

# நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா?

1. கிறிஸ்துவுக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. — கொலோ. 1:14

2. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.
— 2 கொரி. 5:17,

3. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள்கிறார்கள். — 2 தீமோ. 2:10.

4. நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.
— கலா. 3:26.

5. கிறிஸ்துவுக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்கள் எல்லாம் அடங்கியிருக்கிறது. — கொலோ. 2:3.

6. அவர், கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குறிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.
— எபே 1:3.

7. கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்திரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம். — எபே. 1‘12.

8. உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்.
— எபே. 1:13.

மேற்கண்ட அத்தனை ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ள நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியதென்ன?

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கை செய்து, பாவங்களிலிருந்து விடுபட ஞானஸ்நானம் பெற்று, தொடர்ந்து பரிசுத்தமாக வாழவேண்டும்.

மேலும் விவரங்கள் அறிய, உங்கள் அருகாமையிலுள்ள **கிறிஸ்துவின் சபையை** அணுகுங்கள்.

# திருமறை ஆசான் உரிமை பற்றிய அறிக்கை

வெளியிடும் இடம் : 2, மணல்மேடு வீதி,
ஈரோடு-638 002.

அச்சிடுவோர் : D. தேவராஜ்
ஜீவசக்தி பிரஸ் கிருஷ்ணம்
பாளையம் ஈரோடு-638 003.

வெளியிடுவோர் : கிறிஸ்துவின் சபையார்

இந்தியக்குடியா : ஆம்

முகவரி : 2, மணல்மேடுவீதி,
ஈரோடு-638 002.

இதழ் ஆசிரியர் பெயரும் முகவரியும் : E.Z. செல்வநாயகம்
2, மணல்மேடு வீதி,
ஈரோடு 638 002.

இந்தியக்குடியா : ஆம்

முகவரி : 2, மணல்மேடு வீதி,
ஈரோடு-638 002.

E.Z. செல்வநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விபரங்கள் நம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

ஈரோடு
20-3-92

ஒப்பம் E.Z. செல்வநாயகம்.

# பாவங்களை அந்தரங்கமாக அறிக்கையிடுதல்

''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'' — (1 யோவான் 1:9)

கிறிஸ்தவர்கள் தங்களுடைய பாவங்களை தேவனிடம் அறிக்கையிட்டு, அவருடைய தாரளமான தயவையும், மன்னிப்பையும் அடையக் கூடியவர்களாயிருக்கின்றனர். பாவங்களை அறிக்கையிடும் காலம், விதம், இடம், நேரம் என்று குறிப்பிட்டு நமக்கு எதுவும் சொல்லப்படாவிட்டாலும், இக்காரியங்களில் நமது வாழ்க்கை சூழ்நிலைக்கேற்ப தனிப்பட்ட முறையில் முடிவெடுத்து ஞானமாக நடந்து கொள்ள தேவன் விட்டுவிட்டார். என்ற போதிலும், பாவங்களை அந்தரங்கமாக அறிக்கையிடுவது பற்றி வில்லியம் லா என்பவர் எழுதிய ''பக்தியும் பரிசுத்தமான ஒரு வாழ்க்கைக்கு ஒரு தீவிர அழைப்பு'' என்ற புத்தகத்தில் காணப்படும் பயனுள்ள சில அறிவுரைகளை இங்கு காண்போம்.

நமது தனிப்பட்ட ஜெபங்களில், நம்மை நாமே சோதித்து அன்றாடம் செய்யும் பாவக் குற்றங்களை அறிக்கையிட வேண்டும். ''தேவனே, நான் பாவி, என்னை மன்னியும்'' என பொதுவாக ஜெபத்தில் வேண்டுவதற்குப் பதிலாக தினமும் செய்த குறிப்பிட்ட பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும். ஏனெனில் குறிப்பிட்ட பாவங்கள் பற்றிய பயம் நம்மை பெரிதும் பாதித்து, மீண்டுமாக அதே பாவங்களைச் செய்யத் தூண்டும் சோதனைகளை வெல்ல இது மிகவும் உதவுகிறது. எனவே தான், தினமும் நமது தனிச் ஜெபங்களில் இத்தகைய 'சுய குண தோஷ விமர்சனம்' அத்தியாவசியமாகிறது. நமது குற்றங்களுக்குத் திரை போட்டுக் கொண்டு, பிறருடைய தவறுகளைத் தவறாது சுட்டிக் காட்டும் குணம்படைத்த நாம், நமது சொந்தக் குற்றங்களை அக்கரையுடன் பரிசோதித்துப் பார்க்கும் போது அவற்றை மீண்டும் செய்யத் தயங்குவதோடு, பிறரையும் பழிப்பதை நிறுத்திக் கொள்ள முடியும்.

நமது பாவங்களைக் குறிப்பிட்டு அறிக்கை செய்து மன்னிப்பு கோராமல், பொதுவாக என் பாவங்களை மன்னியும் என தெளிவற்ற அறிக்கையிடுவது ''கடமைக்காகச் செய்யும் ஒரு வெற்றுச் சடங்காகவே'' முடியும். பொதுவான பாவ அறிக்கை இருதயத்தில்

எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை, ஒருவன் தினமும் இவ்வாறாக அறிக்கையிட்டுக் கொண்டே இருந்தால் பாவங்களையும் செய்து கொண்டே, தன் வாழ்நாட்கள் முழுவதும் தொடர்ந்து அறிக்கையிட்டுக் கொண்டும் இருப்பான். எவ்வித மன உறுத்தலு-மின்றி அல்லது பாவத்தினின்று விடுபட உண்மையான விருப்பு-மின்றி காலத்தைக் கடத்துவான். தனிப்பட்ட தவறுகளை குறிப்-பிட்டு மன்னிப்பு கேட்கும் போது, இருதயத்தில் குத்துண்ட-வனாக, மனசாட்சி விழிப்படைந்து, பாவத்தை எதிர்த்து நிற்கும் திறன் பெறுகிறான். எனவே, நமது தனிப்பட்ட ஜெபங்களில் தினமும் செய்த பாவங்களை பரிசோதித்து, அவற்றை அறிக்கை-யிட்டு' மீண்டும் அதே பாவங்ளைச் செய்யாதிருக்கும் மனவலி மையைப் பெறுவோம். பாவ சந்தர்ப்பங்களை விலக்குவோம். 1 யோவான் 1:9 வசனத்தில் தேவன் நமக்கு அளிக்கும் மகத்தான வாக்குறுதியை நினைவில் கொள்வோம்.

**ஸ்டீவ் வில்லியம்ஸ்** **எஸ். எஸ். ராஜன்**

## (24ம் பக்கத் தொடர்ச்சி)

களில் ரோம மதம் தீவிரமாக ஈடுபட்டும், சிலர் 'கிறிஸ்தவத்தை' கடைபிடித்தனர் என்பது உண்மையே. (வெளி 2:10). தேவனை மறுதலிக்கும் வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்டு, தவறுகள் போதிக்கப்படுவதை அனுமதித்துக் கொண்டிருப்போமானால் நாமும் 'நியாய விசாரணை' நாட்களில் வெட்கப்பட வேண்டிருக்கும்

5. வேதாகமத்தைக் கடைபிடிக்கும் உண்மைக் கிறிஸ்தவர்களாக நாம் வாழாத பட்சத்தில், தேவனுடைய பார்வையில் ஆவிக்குரிய காரியங்களை அசட்டை செய்வோராகக் காணப்படுவோம். தேவனுடைய கட்டளைகள் எல்லாவற்றிற்கும் நம்மைக் கீழ்படிய விடாமல் தடுத்து, சிலவற்றோடு திருப்திப்பட்டுக் கொள்ளும் நிலையை உருவாக்க சாத்தான் காத்துக் கொண்டிருக்கிறான். எனவே தான், முற்றிலுமாக அப்போஸ்தலருடைய போதனைகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய அவசியத்தை தீர்க்கமாக உணர்ந்து அன்று செயல்பட்டார்கள். உலகிலேயே விலை மதிப்புள்ள சத்தியம் என்ற பொருளுக்கு ஈடு இணை எதுவும் இல்லை; எந்த மாற்றுப் பொருளும் இல்லை என்பதை நாம் உணருவோமா? (யோவான் 8:32). சத்தியம் மட்டுமே காலத்தின் இருளை நீக்க முடியும்.

**ஜானி ராம்சே** **எஸ்.எஸ். ராஜன்**

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridays-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## வாசக அன்பர்களின் கவனத்திற்கு

கர்த்தருக்குச் சித்தமானால் எதிர் வரும் மே மாதம் சென்னை மாநகரில் திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம் ஒன்றினை நடத்த எண்ணி ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்.

இட வசதி காலம், காலநிலை, கலந்து கொள்பவர்களுடைய வசதி, சிறப்பு உரைஞர்களின் வருகை ஆகிய காரியங்களுக்காக ஜெபியுங்கள். திட்டமான அறிவிப்பு ஏப்ரல் மாத இதழில் வெளிவரும்.

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

TO

PRINTED MATTER BOOK-POST

If undelivered please return to,
The Editor
THIRUMARAI AASAAN
PostBoxNo: 58 ERODE-638 001.